*Kalanjiyam International Journal of Tamil Studies* **ISSN: 2456-5148 (Online)**
*An international, peer-reviewed quarterly academic research journal* **www.ngmtamil.in**

**களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.0 Multidisciplinary International
DOI: https://doi.org/10.63300/kijts06022026

**Vol. 6 No. 02, August 2026, p129-135** | Available online at: www.tamilmanam.in
*Original Research Paper*

# பாலகுமாரன் நாவல்களில் பெண்ணுரிமை

Women's rights in Balakumaran's novels

**சீ. திருப்பதி,**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
கணேசர் கலை அறிவியல் கல்லூரி (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது), மேலைச்சிவபுரி - 622407

**S.Tirupathi*,**
*Part-time Doctoral Research Scholar, Department of Tamil, Ganesar College of Arts and Science (Affiliated with Bharathidasan University), Melaisivapuri - 622407. Email: thiruppathiraja183@gmail.com.*

**முனைவர் ம. செல்வராசு,**
நெறியாளர், இணைப் பேராசிரியர் (ம) நெறியாளர் (ப. நி), தமிழ்த்துறை, கணேசர் கலை அறிவியல் கல்லூரி ,(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது) மேலைச்சிவபுரி – *622407*

**Dr. M. Selvarasu,**
*Research Guide, Associate Professor & Research Advisor (Retd.), Department of Tamil, Ganesar College of Arts and Science (Affiliated with Bharathidasan University), Melaisivapuri - 622407.*
*Email: Selvarajum1963@gmail.com*

*Article history*
Received: 20-07-2026
Revised: 25-07-2026
Accepted: 29-07-2026
**Published: 01-08-2026**

*Corresponding Author Email:
*thiruppathiraja183@gmail.com*

**Abstract:** Among Tamil novelists, Balakumaran is a pioneer in articulating contemporary feminist thoughts. He has registered in his novels that both men and women possess individual emotions and rights. Transitioning from an era where women were subjugated in family and social life, women have acquired education and are contributing at all levels of society. However, they are still unable to break free from bearing family responsibilities and being economically dependent on others. Even when assuming high-level positions and performing various duties in society, they have not completely freed themselves from old conventions. Upon returning home, they continue to perform routine chores such as childcare, cooking, and other tasks. It can be said that all the modern appliances invented to make their lives easier only promote a new form of enslavement rather than aiding liberation. Balakumaran has keenly analyzed the lifestyle of women at all levels of society and illustrated through various characters how significant women's rights are in their lives..

**Keywords:** *Female subjugation, Freedom, Liberation, Renaissance, Revolution, Enslavement.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution
(CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ்ப் புதின ஆசிரியர்களில் பாலகுமாரன் சமகாலப் பெண்ணியச் சிந்தனைகளை எடுத்துக்கூறுவதில் முன்னணியாக விளங்கியவர் ஆவார். ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் இருவருக்கும் தனிப்பட்ட உணர்வுகளும் உரிமைகளும் உண்டு என்பதைத் தனது நாவல்களில் பதிவு செய்துள்ளார். குடும்ப வாழ்விலும் சமுதாய வாழ்விலும் பெண் அடிமைப்படுத்தப்பட்ட காலத்திலிருந்து விடுபட்டுப் பெண்கள் கல்விக் கற்று சமூகத்தில் அனைத்து நிலைகளிலும் தங்களின் பங்களிப்பைச் செய்து வருகின்றனர். ஆயினும், குடும்பப் பொறுப்புகளைத் தாங்கிப் பொருளாதாரத்தில் பிறரைச் சார்ந்து வாழ வேண்டிய நிலையில் இருப்பதைக் கடந்து வெளிவர இயலவில்லை. சமூகத்தில் உயர் நிலையில் பல்வேறு பணிகளை ஏற்றுச் செயல்பட்டபோதும் அவர்கள் பழைய வழக்கங்களில் இருந்து முழுமையாக விடுபடவில்லை. வீட்டுக்கு வந்தவுடன் குழந்தைகளைப் பராமரிப்பது சமைப்பது பிற பணிகளைச் செய்வது என வழக்கமான பணிகளை செய்கின்றனர். அவர்களின் வாழ்வை எளிதாக்கக் கண்டுபிடிக்கப்பட்ட நவீன சாதனங்களில் அனைத்தும் புதுவகையிலான அடிமைத்தனத்தை ஊக்குவிக்கின்றனவே அன்றி விடுதலைக்கு உதவவில்லை என்று கூறலாம். பாலகுமாரன் சமூகத்தில் எல்லா நிலைகளிலும் பெண்களின் வாழ்வியலைக் கூர்மையாக ஆராய்ந்து அவர்களின் வாழ்வில் பெண்ணுரிமை எத்தனை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பல்வேறு பாத்திரங்களின் மூலம் விளக்கியுள்ளார்.

**குறிப்புச் சொற்கள்**

பெண்ணடிமை, சுதந்திரம், விடுதலை, மறுமலர்ச்சி, புரட்சி, அடிமைத்தனம்.

**முன்னுரை**

தமிழ் நாவலாசிரியர்களில் பாலகுமாரன் நடுத்தட்டு மக்களின் வாழ்வியலை நாவல்களில் பதிவு செய்தவர். மாறுபட்ட எழுத்து நடை மூலமும் ஆழமான சிந்தனைகள் மூலமும் தமிழ் நாவல் உலகில் தனக்கென்று தனியிடம் கொண்டவர். தான் படைத்த நாவல்களில் பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள், தேவைகள், அவர்கள் தனக்கான உரிமைகளைப் பெற வேண்டியதன் அவசியம் ஆகியவற்றை விளக்கியுள்ளார். பெண், தான் ஆணுக்கு நிகராக இருந்தும் தனக்கான உரிமைகளைப் பிறரிடம் கேட்டுப் பெற வேண்டிய நிலையில் இருக்கிறாள். திருமணத்திற்கு முன்பு பெற்றோர்களைச் சார்ந்தும் திருமணத்திற்குப் பின்பு கணவனைச் சார்ந்தும் வாழ வேண்டிய அவள் தனிப்பட்ட தேவைகளை அடைவதற்கு இன்றைய சூழலிலும் மிகுதியான தடைகள் உன்னை. பெண்களின் உரிமைகள் என்னென்ன? சமூக வாழ்வில் அவர்கள் அனுபவிக்கும் சவால்கள் எவை? என்பவற்றை பாலகுமாரன் நாவல்களின் வழி ஆராயும் பொருட்டு இக்கட்டுரை பாலகுமாரன் நாவல்களில் பெண்ணுரிமைச் சிந்தனைகளை விளக்குகிறது.

**பெண்ணுரிமை விளக்கம்**

உலகில் பிறந்த உயிரினங்கள் அனைத்தும் தனக்கென்று பல பண்புகளைத் தனிப்பட்ட முறையிலும் பொதுநிலையிலும் கொண்டுள்ளன. அவ்வகையில் ஆண்களும் பெண்களும் சமூக வாழ்வில் தங்களுக்கென தனிப்பட்ட உரிமைகளைக் கொண்டிருக்கின்றனர். "உரிமை என்பது நாம் அனுபவிக்கும் அல்லது பயன்படுத்தும் பொருள் அல்லது உயிர் மேல் நாம் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைச் சார்ந்ததாகும்" (வி.ஏ. எம், பெண்ணுரிமையும் இயற்கையின் அடிப்படை விதியும், ப. 89). ஒருவர் தன்னுடைய சிந்தனை, எழுத்து, பேச்சு, முதலானவற்றைத் தான் எண்ணியவாறு வெளிப்படுத்துவது உரிமையாகும். இதனைச் சுதந்திரம் என்றும் கூறலாம். தனிமனிதன் தான் விரும்பியதைச் செய்யவும் விரும்பியதைப் பேசவும் அடிப்படை உரிமை அவசியம். "ஒருவரின் உரிமை என்பது, ஒருவர் கொடுப்பதும் அன்பு, மற்றொருவர் வாங்குவதும் அன்பு. அது எவரிடத்திலும் எல்லா இடத்திலும் இயல்பாக இருப்பது. சிலர் தமக்குள்ள ஆதிக்கத் தன்மையால் பிறர் உரிமையைப் பறிக்கின்றனர். ஒருவர் உரிமைக்கு மற்றொருவர் கேடு செய்வதிலும் கொடிய கேடு வேறுண்டா" ( ராபர்ட் , ஆண் பெண் விழிப்புணர்வு, ப.35). இக்கருத்து எல்லாருக்கும் எல்லா உரிமைகளும் பொதுவானவை; அவற்றை தடுக்க நினைப்பது அறிவற்ற செயல் என்பதை விளக்குகிறது.

ஆண், பெண் இருவரில் ஆண்கள் சுதந்திரமாகப் பேசவும் பல்வேறு செயல்களை மேற்கொள்ளவும் உரிமை உடையவர்களாக இருக்கின்றனர். ஆனால் பெண்கள் ஆண்களைச் சார்ந்து வாழ வேண்டியவர்களாக இருக்கின்ற காரணத்தாலும் மென்மைத் தன்மை அடிப்படையிலும் பண்டைய சமுதாய மரபின் தொடர்ச்சியிலும் தாய் வழிச் சமூகத்தை அடுத்து பெண்களை அடிமைப்படுத்தி அவர்களின் உரிமைகளைப் பறிக்கும் நிலை நிலவியது. இச்சூழலிலிருந்து வெளிவருவதற்குப் பெண் கடுமையான சவால்களைக் கடந்து வெளிவர வேண்டியிருந்தது. தொடர்ந்து நிகழ்ந்த அடக்குமுறைகளின் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து பெண்கள் கல்வி கற்று அறிவுப் பெற்றுப் போராட முற்பட்டனர். "தார்மீக அடிப்படையிலான உரிமைகளைச் சமூகம் மீறுகிறபோது நியாயமாக நிர்ணயிக்கப்பட்ட உரிமைகளை அரசாங்கம் மறுக்கிறபோது உரிமைக் குரல் புரட்சிக்கனலாக வெடித்துக் கிளம்புகிறது" என்று தி. பாக்கியமுத்து குறிப்பிடுகிறார் (தி. பாக்கியமுத்து, மனித உரிமைகளும் மக்கள் போராட்டமும் ப. 22)

**பாலகுமாரனின் பெண்ணுரிமைச் சிந்தனை**

பாலகுமாரன் தனது நாவல்களில் பெண்ணடிமை நிலையைக் கூறி அதற்கான சூழல்கள் மற்றும் தீர்வுகளை முன் வைத்துள்ளார். குறிப்பாக, பந்தயப்புறா, திருப்பூந்துருத்தி, இனியெல்லாம் சுகமே, கரையோர முதலைகள், மாலை நேரத்து மயக்கம், அன்புக்குப் பஞ்சமில்லை முதலான நாவல்களில் பெண்ணுரிமை சிந்தனைகளைப் பதிவு செய்திருக்கிறார்.

**ஆணாதிக்கம்**

தாய்வழிச் சமூக உறவில் பெண்களுக்குச் சொத்துரிமை இருந்தது; அவர்களே குடும்பத்தைத் தலைமை ஏற்று நடத்தினர். தந்தைவழிச் சமூகம் உருவானபோது பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டனர்; சொத்துரிமை மறுக்கப்பட்டது; குடும்ப வாழ்வில் அவளுக்கு இரண்டாம் இடமே வழங்கப்பட்டது; அவளது பேச்சுக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை. இன்றைய சூழலில் நவீன வசதிகள் பல பெருகியபோதும் அடிமை நிலை மட்டும் அகலவில்லை என்பதை பாலகுமாரன் மாலை நேரத்து மயக்கம் என்னும் நாவலில் எடுத்துக்காட்டியுள்ளார். "அசிங்கம் மெத்த வளர்ந்த மேற்குப்புறத்திலும் பெண்களை ஆண்கள் அதிகம் மதித்து விடவில்லை. ப்ரா வேண்டாம் என்கிற இயக்கம் வந்தபோது ஆண்கள் வரவேற்றார்கள்; பாராட்டினார்கள்; ஏன் பாராட்டுகிறார்கள்? என்று கேட்டபோது உண்மையைத் தெரிந்து கொள்ளும் ஆசை என்று கண் சிமிட்டினார்கள்" (பாலகுமாரன், மாலை நேரத்து மயக்கம், ப. 38) மேற்கண்ட கருத்து இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகளாவிய நிலையிலும் ஆணாதிக்கப் போக்கு நிகழ்வதற்கு எடுத்துக்காட்டாக அமைகிறது. இந்திய நாடு உலகில் சிறந்த நாகரீகத்தைக் கொண்டிருந்த போதும் ஆணாதிக்கம் மற்றும் அடிமை நிலை நிலவி வருவது கவனிக்கத்தக்கது.

அன்புக்குப் பஞ்சமில்லை என்னும் நாவலில் சந்திரா பாத்திரம், தான் விரும்பியவனைத் திருமணம் செய்ய நினைத்தபோது அவளது அண்ணனே அதற்கு தடையாக இருக்கிறான். அவனது ஆணாதிக்கப் போக்கின் தன்மையை பாலகுமாரன் பின்வருமாறு விளக்குகிறார்."மீசைதான் பௌருஷம் என்று நினைக்கிற எண்ணம்; புஜ பலம் தான் வீரம் என்று நினைக்கிற மனப்போக்கு, சிங்கத்திற்கு சூட்டுக்கோல்; செம்புலிக்கு சவுக்கடி; யானைக்கு அங்குசம்; பசுவிற்குத் தாம்புக்கயிறு; நாய்க்குச் சங்கிலி; கிளிக்குக் கூண்டு; புறாவிற்கு மரப்பெட்டி; தும்பிக்கு நூல் கயிறு; மீனுக்குப் புழுக்கொக்கி என்று அஃறிணையாய்ப் பெண்ணை நினைக்கிற பெரும்கூட்டத்தில் கோவிந்தராஜன் முதன்மையானவனாய் இருந்தான். வெட்கமின்றித் தன் வீட்டு மாப்பிள்ளையைத் தன் தங்கையிடம் முரட்டுத்தனம் காண்பிக்கச் சொன்னான் "(பாலகுமாரன், அன்புக்குப் பஞ்சமில்லை, ப. 28) தன் தங்கையின் விருப்பத்தை நிறைவேற்ற முடியாத அண்ணனாக ஆணாதிக்கச் சிந்தனையை வெளிப்படுத்த நினைக்கும் மனிதனாக கோவிந்தராஜனைப் படைத்துப் பெண்களை அடிமைப்படுத்த நினைக்கும் கூட்டத்தில் அவனை முதன்மையானவனாகக் காட்டுவது அவனது குண இயல்பை அறியப் பயன்படுகிறது. ஆணுக்கும் பெண்ணுக்கும் வாழ்க்கை ஒரே உலகம் தான் என்றாலும் சமூகக் கட்டுப்பாடுகள் மற்றும் சமூகக் கோட்பாடுகள் பெண்ணுக்கு எதிராக இருப்பதை, "இவ்வுலகம் ஆணுக்கும் பெண்ணுக்கும் உலகம் ஒன்றல்ல. 'அவன்' உலகம், 'அவள்' உலகம் என்று வேறுபட்ட இரு உலகங்களில் நாம் வாழ்கிறோம். எந்த ஒரு அனுபவமும் காதல், திருமணம், குடும்பம் உட்பட பெண்களின் அனுபவங்கள் ஆண்களின் அனுபவங்களினின்றும் வேறுபட்டவை. இதற்குப்

பின்னணிக் காரணங்கள் சமுதாயக் கோட்பாடுகளே" (ரெஜினா பாப்பா, இலக்கியத்தில் பெண்ணியச் சிந்தனைகள், முன்னுரை) என்னும் சிந்தனைகள் வழியாக ரெஜினா விளக்குகிறார். ஆண் தன்னை உயர்வாக நினைப்பதும் பெண்ணை அடிமைக் கொள்ள நினைப்பதும் ஆணாதிக்க மனப்பான்மையாகும் என்று பாலகுமாரன் விளக்கியுள்ளார்.

**குடும்ப வன்முறை**

குடும்ப அமைப்பு புரிந்துணர்வின் மூலம் மேம்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். ஆண் என்னும் கர்வக◌ குணத்தால், தான் என்ன செய்தாலும் பெண் தாங்க வேண்டும் என்னும் மனப்பான்மையுடன் செயல்படுவது தவறான செயலாகும். இயல்பாகவே சமூகத்தில் பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை கண்டுக்கொள்ளப்படாததாகவும் புரிந்து கொள்ளப்படாததாகவும் உள்ளது. குடித்துவிட்டு வந்தும் சந்தேகக் கண் கொண்டு துன்புறுத்துவதும் குடும்ப வன்முறையாகும். தான் கொண்ட கர்வத்தால் பெண்ணைத் துன்புறுத்துவது தவறு என்றும் அத்தகைய குணம் கொண்ட மனிதர்கள் மனநோயாளிகள் என்றும் கரையோர முதலைகள் என்ற நாவலில் பாலகுமாரன் குறிப்பிடுகிறார். இதனைப் பின்வரும் பகுதியால் அறியலாம். "மனைவியை நீ கை நீட்டி அடிப்பது என்பது ஆபாசத்தின் உச்சம். வெளி உலகில் எவன் கோழையாக இருக்கிறானோ, எவன் பயந்த சுபாவம் உள்ளவன் என்று காட்டிக் கொள்கிறானோ, அதீத பொறுமைசாலியாய் நடக்கிறானோ அவன் வீட்டுக்குள் மனைவியின் எதிரே சகலத்தையும் பூஜபலத்தால் அடக்குபவன் போலக் காட்சியளிக்கிறான்"(பாலகுமாரன், கண்ணே கலைமானே, ப. 204)

கைவீசம்மா கைவீசு நாவலில் பெண்ணுக்கு ஆண் துணை தேவை இல்லை என்னும் சிந்தனையைப் பள்ளி ஆசிரியை மூலம் விளக்குகிறார். "ஆம்பளையை நம்பாதீங்கோன்னு தினம் கதறினேன்டி. கேட்கலை கேலி பண்ணினேன். நான் இன்னிக்கு நேத்துக்கு இந்த முடிவுக்கு வரலை; எம் பதினாறு வயசுல எங்க அக்கா தலை முடியைப் பிடிச்சு தர தரன்னு தெருவுல இழுத்துண்டு போய் பிள்ளையார் கோயில் வாசல்ல செருப்பால அவ ஆம்படையான் அடிச்ச அன்னிக்கு தீர்மானம் பண்ணினேன்" (பாலகுமாரன், கைவீசம்மா கைவீசு, ப. 34) ஆண்களின் அடக்குமுறையில் இருந்து பெண்கள் தாமே வெளியேற வேண்டும் என்னும் நிலையே அவர்களுக்கு விடுதலை தரும் என்னும் சிந்தனையை பாலகுமாரன் விளக்குகிறார்.

**திருமண உறவை விலக்குதல்**

திருமணம் என்னும் பெயரில் அடிமைத்தனத்தை வளர்ப்பதில் சிறந்த வாழ்க்கையாக அமையாது. திருமணம் செய்து கொண்டு அடிமை வாழ்க்கை வாழ்வதை விடத் தனியாக இருப்பதே சிறந்ததாகக் கருதலாம். பெண்ணை◌ உணர்வுடையாவளாக எண்ண வேண்டும் என்பதை என்னுயிர்த் தோழி என்னும் நாவலில் விளக்குகிறார். "பெண் ஜடப்பொருள் அல்ல. ஜடமாகப் பெண் இருப்பின் வாழ்க்கை செத்துப் போகும். உன்னை அவள் தேவையென்று உபயோகப்படுத்தத் துவங்கினால் ஊர் நாறிப் போகும். பெண் விழித்துக் கொண்ட காலம் இது. மரியாதை குறைந்தால் உன் மரியாதையே காணாமல்

போகும். தாலி கட்டி மாடுபோல பின்னே கூட்டி வரும் நிலை இனி இல்லை" (பாலகுமாரன், என்னுயிர் தோழி, ப.245) திருமணம் சமூக மதிப்பாக கருதப்பட்டது. திருமணமாகாத பெண் பழிப்புக்கு உள்ளானாள். சரியான வயதில் திருமணம் நடைபெறுவது சில சமூகத்தில் பெருமையாகக் கருதும் வழக்கம் நிலவியதை திருப்பூந்துருத்தி என்ற நாவல் விளக்குகிறது. பாலகுமாரன் சரியான திருமண உறவு அமையவில்லை என்றால் வாழ்க்கை இனிமை இல்லாமல் போகும். பெண்ணுக்குத் திருமணம் என்பது விலங்கைப் போன்றது. என்கிறார் இன்றைய சூழலில் திருமணம் தேவையில்லை என்பது புதிய சிந்தனையாக பாலகுமாரன் சுந்தரி கண்ணால் ஒரு சேதி என்னும் நாவலில் வசுந்தரா பாத்திரம் மூலம் விளக்கப்படுகிறது.

**பெண்ணுரிமைக்கான தேவை**

பாலகுமாரன் பெண் விடுதலைக்குத் தடையாக மூடநம்பிக்கைகள், சமூகக் கட்டுப்பாடுகள், சாதிக் கட்டுப்பாடுகள், கற்பு, காமம் முதலியவற்றைக் குறிப்பிடுகிறார். பெண்கள், திருமண வாழ்வில் அடங்கி இருக்க வேண்டும்; மரபு மீறக் கூடாது எனப் பல கட்டுப்பாடுகளை ஏற்க வேண்டிய நிலையில் உள்ளனர். இத்தகைய கட்டுப்பாடுகள் தொடரும்போது அதனை விட்டு வெளியேற வேண்டிய மனநிலை இயல்பாகவே தோன்றிவிடும். சாதி மாறித் திருமணம் செய்யும்போது உறவு நிலையில் ஏற்றுக்கொண்டாலும் உள்ளத்தில் ஏற்காத நிலை நிலவுவதை சுக ஜீவனம் நாவலில் பின்வருமாறு விளக்குகிறார். "என் புருஷனை என்னிக்காவது தாங்கியிருக்கியா? மனசார கூப்பிட்டு மரியாதை பண்ணியிருக்கியா? இது பூஜை ரூம், அது கிச்சன், இது அப்பாவோட தியான ரூம்னு பூட்டு பூட்டின கதவு காட்டினேன். நீங்க சாப்பிடுங்கோ எனக்கு பசிக்கலன்னு விலகி நின்னேன். அவருக்குத் தெரியாது உங்க ஜாதி வெறி" (பாலகுமாரன், சுக ஜீவனம், ப. 118) சுப்புலட்சுமியின் மூலமாகப் படித்த பெண்கள் சாதி, சமயம் மூட நம்பிக்கை முதலியவற்றில் இருந்து வெளிவர நினைப்பதையும் சுதந்திரமாக வாழ நினைப்பதையும் பதிவு செய்துள்ளார்.

காமம், கற்பு என்னும் கோட்பாடுகள் பெண்ணை அடிமைப்படுத்துவதில் முதன்மையான கூறுகளாக விளக்குகின்றன. கற்புக் கோட்பாடு பெண்களுக்கு அடிமைத்தனத்தை வளர்ப்பதிலும் கட்டுப்பாடுகளை திணிப்பதிலும் பெரும்பங்காற்றுகிறது. ஆணாதிக்க சமூகம் அல்லது தந்தைவழிச் சமூகம் பெண்ணை அடிமைப்படுத்தக் கருவியாகப் பயன்படுத்தியதே கற்புக்கோட்பாடு ஆகும். கற்பு என்னும் பண்பு இயல்பானது. ஆனால் கற்பின் பெயரால் அடக்குமுறை ஏற்படும்போது பெண் அதைக் கடந்து வெளியேறுவது தேவையாகிறது. பெண் சுதந்திரத்திற்கு கற்பு தடையாக இருக்கக் கூடாது என்பதை தாயுமானவன், மஞ்சக்காணி என்னும் நாவல்களை வெளிப்படுத்தியுள்ளார்.

பெண் சுதந்திரம் இயற்கையை மீறிய செயலோ வரம்பு மீறிய செயலோ அல்ல. அது பெண்ணுக்கு இயல்பான தேவை. அவ்வாறே பெண் விடுதலையை நவீனம் என்றும் கருதி விடக்கூடாது என்னும் சிந்தனையை சுழல் காற்று நாவலில் கோபிக்கிருஷ்ணனின் சிந்தனையாக

வெளிப்படுத்துகிறார். "இராதிகா வெறும் மனைவியாக இருப்பாளெனில◌் நான் இந்த கணமே திருமணத்திற்கு தயார். ஆனால் ராதிகா உங்களைப்போல தன்னை மிக நவீன பெண்மணி என்று சொல்லிக் கொள்கிறாள். நவீனம் என்ற வார்த்தையை நம்மில் பலர் தவறாக புரிந்து கொண்டிருக்கிறார்கள். எல்லா விதையும் மண்ணில்தான் முளைக்க வேண்டும். நீரும் வெளிச்சமும் மிக அவசியம். காற்றில் விதை முளைக்காது; இருட்டில் பூ மலராது. நவீனம் என்பது இயற்கையிலிருந்து மாறுவது அல்ல" (பாலகுமாரன், தாயுமானவன், ப. 217)

**முடிவாக**

பாலகுமாரன் தனது படைப்புகளில் பெண்ணுரிமைச் சிந்தனைக்கு மிகுதியான இடம் வழங்கியுள்ளார். குடும்ப வாழ்விலும் பொது வாழ்விலும் பெண்கள் தங்களுக்கான மரியாதை, சுதந்திரம் முதலியவற்றைப் பெற வேண்டும். அதற்கு சாதி, சமூகம் முதலான கட்டுப்பாடுகள் இருக்கக் கூடாது என்பதை வலியுறுத்தியுள்ளார். குடும்ப வாழ்வு, திருமணம், சமூக வாழ்க்கை முதலானவற்றில் பெண்களை அடிமைப்படுத்தும் சூழல்கள் இருக்கக் கூடாது என வற்புறுத்துகிறார். திருமணம், கற்பு முதலானவற்றின் மூலம் அமைதியற்ற சூழல் ஏற்படுமானால் அதனை விட்டு வெளியேறுவது சிறந்த பெண்ணுரிமையாகவும் பெண் விடுதலையாகவும் அமையும் என்று தன் நாவல்களில் பதிவு செய்துள்ளார்.

**பயன்பட்ட நூல்கள்**

[1.] இரும்புக் குதிரைகள், விசா பப்ளிகேஷன்ஸ், சென்னை: 1984

[2.] இனியெல்லாம் சுகமே, விசா பப்ளிகேஷன்ஸ், சென்னை: 1997.

[3.] என்னுயிர் தோழி, விசா பப்ளிகேஷன்ஸ், சென்னை: 1997.

[4.] கரையோர முதலைகள், விசா பப்ளிகேஷன்ஸ், சென்னை: 1994.

[5.] கைவீசம்மா கைவீசு, விசா பப்ளிகேஷன்ஸ், சென்னை: 1989.

[6.] சுக ஜீவனம், விசா பப்ளிகேஷன்ஸ், சென்னை: 1996

[7.] தாயுமானவன், விசா பப்ளிகேஷன்ஸ், சென்னை: 1998.

[8.] பாக்கியமுத்து. தி, தமிழ் நாவல்களில் மனித உரிமைகளும் மக்கள் போராட்டமும், கிறிஸ்தவ இலக்கிய சங்கம், சென்னை: 1972.

[9.] ராபர்ட் , ஆண் பெண் விழிப்புணர்வு, யாழ்ப்பாணம்: 1991.

**எழுத்தாளர் பிரகடனம் - முரண்பாடுகள் அறிக்கை (Author Declaration - Conflict of Interest Statement)**

இவ்வாய்வுக் கட்டுரையின் உள்ளடக்கத்திலோ, தரவுப் பகுப்பாய்விலோ அல்லது அதன் முடிவுகளிலோ எந்தவிதமான நிதி சார்ந்த அல்லது தனிப்பட்ட முரண்பாடுகளும் (No Conflict of Interest) இல்லை என்று இதன் முதன்மை எழுத்தாளர் உறுதிபடப் பிரகடனம் செய்கிறார். இக்கட்டுரை முற்றிலும் கல்வி மற்றும் சமூக மேம்பாட்டு ஆராய்ச்சிக்காக மட்டுமே நடுநிலைமையோடு எழுதப்பட்டுள்ளது.